செய்தி வெளியீடு எண். 113 நாள்: 22.02.2018

# <u>சாரண இயக்கத்தை தோற்றுவித்த இராபர்ட் ஸ்டீவன்சன் ஸ்மித் பேடன் பவுல் பிறந்த தினத்தை உலகம் முழுவதும் சிந்தனை நாளாக அனுசரிப்பதையொட்டி விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்</u>

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சாரண இயக்கத்தை தோற்றுவித்த இராபர்ட் ஸ்டீவன்சன் ஸ்மித் பேடன் பவுல் பிறந்த தினத்தை உலகம் முழுவதும் சிந்தனை நாளாக அனுசரிப்பதையொட்டி விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் (22.02.2018) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

சாரண இயக்கத்தை தோற்றுவித்த சர் இராபர்ட் ஸ்டீவன்சன் ஸ்மித் பேடன் பவுல் அவர்களின் பிறந்த தினமான பிப்ரவரி 22-ஐ உலகம் முழுவதும் சிந்தனை நாளாக (Thinking Day) அனுசரிக்கப்படுவதையொட்டி பேரணி நடத்தப்படுகிறது. இப்பேரணி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துவங்கி திருவள்ளூர் வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நிறைவடைந்தது. இத்தினத்தையொட்டி பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, பாட்டுப்போட்டி மற்றும் கோலப்போட்டிகள் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டது. அதன்பின் தூதுவர்கள் என்ற தலைப்பில் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

இப்பேரணியில் திருவாலங்காடு அரசினர் மேல்நிலைப்பள்ளி, திருத்தணி அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, கீழ்மணப் புதூர் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, பட்டாபிராம்-சத்திரம் மேல்நிலைப்பள்ளி உள்ளிட்ட 16 பள்ளிகளைச் சேர்ந்த 400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துக்கொண்டனர். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.த.இராஜேந்திரன், திருவள்ளூர் வட்டாட்சியர் திரு.தமிழ்செல்வன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**